செ.வெ.எண்:396/2009(செமதொஅ) நாள். 16.11.2009

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள தனியார் நிறுவனங்கள் கிராம மக்களுக்கு வேலையளிக்க வேண்டும் என திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு அவர்கள் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தனியார் நிறுவனங்களின் சமூக பொறுப்பு குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப, அவர்கள் தலைமை தாங்கினார். காவல் கண்காணிப்பாளர் திரு.ஆனந்த் சின்உறா இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராசன் மற்றும் நோக்கியா, சேம்சங், செயின்ட் கோபைன், இன்ஃபோசிஸ் உட்பட 42 தனியார் நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டனர். ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது,

ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்கு சேகரிக்கச் சென்ற போதும், வெற்றிப் பெற்ற பின் நன்றி தெரிவிக்கச் சென்றபோதும், அப்பகுதி மக்கள், தொகுதியில் பல தனியார் நிறுவனங்கள் இருந்தும், இங்குள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில்லை என்று புகார் தெரிவித்தனர். இதுதொடர்பாக மாவட்டத்தில் உள்ள பல்வேறு நிறுவனங்களை அழைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகிறது. இப்பகுதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களில் தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அதிகமாக பணிபுரிவது மகிழ்ச்சி அளிக்கிறது. இருப்பினும் ஸ்ரீபெரும்புதூர் சுற்றுயுள்ள 10 மற்றும் 12ஆம் வகுப்பு படித்த இளைஞர்களை பணி அமர்த்துவது இல்லை என கூறப்பட்டது.

தொழிற்நுட்பத் திறமைவாய்ந்தவர்களை வெளியிலிருந்து தேர்வு செய்தாலும், அடிப்படை பணியிடங்களை நிறுவனங்களைச் சுற்றியுள்ள 10 மற்றும் 12ஆம் வகுப்பு படித்த இளைஞர்களுக்கு வழங்க வேண்டும். குறைந்த விலையில் நிலம், மின்சாரம் உள்ளிட்ட பல சலுகைகளை தனியார் நிறுவனங்களுக்கு அரசு வழங்கியுள்ளது. இந்த அரசு பல்வேறு சலுகைகளை வழங்கியுள்ள நிலையில், அந்த அரசை உருவாக்கிய மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிட வேண்டும். மேலும், அவ்வாறு வேலைவாய்ப்பை வழங்கும்போது படித்த பெண்கள், விதவைகள், ஆதரவற்றோர், ராணுவத்தில் உயிரிழந்தோர் மனைவி, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

தகுதி சற்று குறைவாக இருப்பதாக நினைத்தால் அவர்களுக்கு தனியார் நிறுவனத்தினர் பணியமர்த்தி, பயிற்சி அளித்து, பயிற்சிக்கான உதவித் தொகையும் அளித்து, பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் இந்த ஆண்டு படித்த இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கிய விவரம் மற்றும் சாதனை குறித்த மலர் மாவட்ட நிர்வாகம் மூலம் அடுத்த ஆண்டு ஜனவரியில் வெளியிடப்படும் என கூறினார். கூட்டத்தில் தனியார் நிறுவன உயர் அதிகாரிகள் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாக கூறினார்கள் என தெரிவித்தார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்